# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண்.243/2004**

பெயர்: **பொன்னுச்சாமி** நாள்: 09.06.2025

பி.வா.சா.2 – வாதி தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.2 – பொன்னுச்சாமி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 04.50

நான் என்னுடைய பண பலம் அரசியல் பலம் மூலமாக வாதியின் பட்டாவை இரத்து செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இந்த வழக்கின் 2-ம் பிரதிவாதியான சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது பட்டாவை இரத்து செய்ய மனு கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக இந்த வழக்கு இச்சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளபோது வாதி பெயரிலான பட்டாவை இரத்து செய்யக்கோரி நான் கொடுத்த மனுவின் பெயரில் விசாரணை நடத்த இந்த வழக்கின் தரப்பினரான 2-ம் பிரதிவாதிக்கு சட்டப்படி உரிமையோ, அதிகாரமோ இல்லை என்று சொன்னால், சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு பட்டாவில் பெயர் சேர்க்கப்பட்டதால் இரத்து செய்யக்கோரி வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன் என்று சாட்சி சொல்கிறார். நான் நல்லெண்ணத்தின் அடிப்படையில் வாதி பெயரை பட்டாவிலிருந்து நீக்க கோரி மனு செய்வதாக இருந்தால், உடனடியாக வாதி பெயரை நீக்க மனு கொடுத்திருப்பேன் என்றாலும், எனக்கு வேண்டிய வருவாய் அதிகாரி துணையுடன் வாதி பெயரிலான பட்டாவை இரத்து செய்ய 15 ஆண்டுகள் காலதாமதமாக மனு கொடுத்துள்ளீர்கள் என்றால், சரியல்ல. வாதி பெயரில் முறை கேடாக வாங்கப்பட்ட பட்டாவை இரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்தேன் என்று சாட்சி கூறுகிறார். உரிமையியல் வழக்கில் தரப்பினராக உள்ள 2-ம் பிரதிவாதி மேற்படி நான் கொடுத்த மேல்முறையீட்டு மனுவை விசாரணை செய்தது சட்டத்திற்கு முரணானது என்றால், சரியல்ல. குப்பண்ணநாடார் என்பவருக்கு நல்லையன் நாடார் மகன் என்பதால் தான் 06.05.1926-ம் தேதியிலேயே ஏற்படுத்திய அடமானக் கடன் பத்திரத்தில் குப்பமூப்பன் மகன்களான சபாபதி மூப்பன், செங்கோடன் மூப்பன் ஆகியோர்களிடம் சேர்ந்து நல்லையன் நாடார் மனைவி செல்லத்தாளும் ஒரு அடமான குதவை கடன் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்று சொன்னால், சரியல்ல. குப்பமூப்பன்மகன் நல்லையன் நாடார் அல்ல, சபாபதி நாடார் மற்றும் வாரணவாசி நாடார் தான் அவருடைய மகன்கள் ஆவார்கள் என்று சாட்சி கூறுகிறார். குப்பமூப்பன் என்பவருக்கு செங்கோட நாடார் மற்றும் நல்லைய நாடார் ஆகியோர்களும் மகன்கள் தான் என்றும் நான்

அதை மறைத்து பொய்யாக சாட்சியம் கூறுகிறேன் என்றால், சரியல்ல. வாதி பெயரிலான 09.04.1999 உயில் ஆவணம் தான் இரத்தினசாமி நாடாரின் இறுதி உயில் என்றால், 09.12.1994 உயில் ஆவணம் தான் கடைசியாக எழுதிய உயில் அதன்பிறகு எந்த உயிலும் எழுதவில்லை. 09.12.1994-ம் தேதியில் இரத்தினசாமி எழுதிய உயிலானது வாதியில் பெயரில் எழுதிய உயிலால் இரத்து செய்யப்பட்டுவிட்டது என்றும் ஆகையால் தான் 09.12.1994 உயிலானது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றால், சரியல்ல. வாதி பெயரிலான 09.04.1999-ம் தேதிய உயிலானது இரத்தினம் என்கிற இரத்தினசாமி இறந்தபிறகு நடைமுறைப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் வாதி தாவா சொத்துக்களை சுவாதீனம் செய்து விவசாயம் செய்து வருகிறார் என்றால், சரியல்ல. வாதி தாவா சொத்தை விவசாயம் செய்து அனுபவத்து வருவதால் தான் தாவா சொத்திற்கான 2000, 2001, 2005, 2006, 2008, 2009, 2010, 2011, 2014 மற்றும் 2016 ஆண்டிற்கான பி.வா.சா.ஆ.1 அடங்கல் கணக்கில் குறிப்பு உள்ளது என்றால், சரியல்ல. அதேபோல் வாதி தாவா சொத்தை அனுபவத்து வருவதின் அடிப்படையில் தாவா சொத்தில் உள்ள தார்சு வீட்டிற்கு வீட்டு வரியும், மின் கட்டணமும் இன்றுவரை செலுத்திவருகிறார் என்றால், சரியல்ல. வாதிதான் தாவா சொத்திற்கு கந்தாயமும் செலுத்தி வருகிறார் என்றால், சரியல்ல. வாதி வழக்கில் கோரியவாறு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் செலவுத் தொகையுடன் அனுமதித்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட வேண்டியது என்றால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம்.05.15</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R
Digitally signed by ELAMATHI R
Date: 2025.06.09 17:58:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.